# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS .No.**165/2024

| பெயர் | | திருமதி. தர்மதேவி | ஊர் | : | காட்டுதோட்டம் |
|---|---|---|---|---|---|
| க.பெ. | : | திரு.திருமேனி | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 76 | தொழில் | : | **வீட்டுகுடித்தனம்** |

2026ம் ஆண்டு திங்கள் பிப்ரவரி-3ஆம் நாள் **பி.சா. 2 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

5ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

மற்ற பிரதிவாதிகள் என்னுடைய குழந்தைகள் என்றால் ஆமாம். என்னுடைய குழந்தைகள் அனைவருக்கும் என்னுடைய கணவர் சொத்துக்களை பிரித்து கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். அந்த சொத்துக்கள் எல்லாம் என் கணவருடைய சுய சாம்பாத்திய சொத்துக்கள் என்றால் ஆமாம். வாரிசுதாரர்களுக்கு பிரித்து கொடுத்தது போக தமக்காக வைத்திருந்த சொத்தைதான் 5ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்தார் என்றால் ஆமாம். 5ஆம் பிரதிவாதிக்கு என்னுடைய கணவர் என்ன சொத்து எழுதி வைத்தார் என்றால் திருமேனி நகர், விரிவாக்கத்தில் உள்ள 5பிளாட்டை உயிலாக எழுதிவைத்தார்.

1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வாதி ரவிசந்திரனும், 1ஆம் பிரதிவாதியும் என்னுடைய மகன்கள் என்றால் ஆமாம். வழக்கிடை சொத்தை எனது கணவர் விலைக்கு வாங்கினார் என்றால் ஆமாம். வழக்கிடைசொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என்றால் என் கணவர் அவரவர்களுக்கு

பிரித்து கொடுத்துவிட்டார் அது அவரவர் பெயரில் உள்ளது. சொத்துக்கள் என்ன வகையான அனுவபவத்தில் உள்ளது என்றால் அவரவர் தனி அனுபவத்தில் உள்ளது. தாவா சொத்து பூர்விக சொத்து அல்ல என்றால் ஆமாம். என் கணவர் என் பேரனுக்கு உயில் எழுதிவைத்ததன் அடிப்படையில் அந்த சொத்து பேரனுக்கு போய்விட்டது என்றால் ஆமாம்.

வாதி தரப்பு குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோள்படி ஒத்திவைக்கப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.03 18:47:06 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**

**தஞ்சாவூர்.**